**தலைப்பு 280 - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை கணகீட்டு உத்தியோகத்தரிற்கு 2020 யூன் 12 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 29 ஆந் திகதி கணகீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 201திசெம்பர் 31 இல் உள்ளவாறான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) 2018 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 53,755,452 ஆக காணப்பட்ட ஆதுனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி 2019 சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதியாக ரூபா 62935,553 எனும் வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் முன்னைய ஆண்டின் எண்ணிக்கையில் அதன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்ததாக இருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 வரவு செலவுத் திட்ட உரையின் 212 ஆம் பந்தி மற்றும் 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய 5’2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டின் கூட்டுத்தொகையில் 25 சதவீதம் சேமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 280-2-1-0-2506 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அறிவித்து இந்த சேமிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,500,000 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 651,751 அதாவது 19 சதவீதம் சேமிப்பாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகையில் 85 சதவீதம் அதாவது ரூபா 600,000 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | நிதிஏற்பாடு உரிய திட்டத்துடனும் செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அறிவித்து இந்த சேமிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களம் மீளாய்வாண்டின் போது நிதிஏற்பாடுகளை மிகைத்து ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளை மிகைத்து எவ்வித கடப்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

2.3 **அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 4 ½ ஆண்டுகளுக்கு முன்னிருந்து காணப்படும் சேவையை விட்டுச்சென்ற அலுவலர் ஒருவரது கடன் நிலுவைத்தொகை ரூபா.139,921 தொகையான அறவிடப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக கடன்மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைக்கடன் தொகையை பெற்றுக்கொள்ள இத்திணைக்களத்தினால் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் 319 விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்துதல் மற்றும் நிதி அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படும் இரண்டு செயற்திட்டங்களுக்குரிய செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்தி அத்திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்டங்கள் கண்காணிப்பு செயற்பாடுகள் நாளாந்தம் எழுகின்ற சிக்கலான தேவைப்பாடுகள் அடிப்படையில் கூட்டங்கள் மற்றம் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுவதுடன் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்க இயலாமை காணப்படுகின்றது. |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 யூன் மாதத்தின் போது வெளியிடப்பட்ட தேசிய மதிப்பீட்டுக் கொள்கை யை செயற்படுத்தும் பொருட்டு தேசிய மதிப்பீட்டு காலச்சட்டகத்தை | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | அக்கொள்கை சட்டகத்தின் இறுதி காணப்பட்ட வரைவினை மேலும் மேம்படுத்துவுதற்காக அது தொடர்பாக அறிவு, அனுபவமுடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் |

| | | |
|---|---|---|
| தயாரித்தல் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.. | | கூடிய குழுவொன்று கூடி அதனை மேம்படுத்தி விரிவான கொள்கை சட்டகமொன்று தயாரிக்க முடியுமென. |

### 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக பிணைகள் சமர்ப்பிக்கபட்ட வேண்டிய அலுவலர்களால் பிணை வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ம் திகதியில் அனுமதிக்கப்பட்ட ஆளணி 106 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 72 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 34 ஆக இருந்ததனர். அது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 32 சதவீதமாகும். ஆளணியாகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை சிரேஷ்ட மட்டத்தில் 7 ஆகவும் மூன்றாம் மட்டத்தின் பதவிகள் 3 ஆகவும் இரண்டாம் மட்டத்தின் பதவிகள் 20 ஆகவும் ஆரம்ப மட்டத்தின் பதவிகள் 4 ஆகவும் இருந்தன. சிரேஷ்ட மட்டத்தில் 07 பதவிகளில் 05 திட்டமிடல் சேவைக்குரிய பணிப்பாளர் பதவிகளாக இருந்தன. | இப்பதவிகளின் வெற்றிடங்கள் காணப்படுவது நிறுவகத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்குமானால் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவ்வாறான தாக்கங்கள் இல்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் எண்ணிகையை திருத்தம் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேணடும். | வெற்றிடங்களிற்கான அலுவலர்களை நியமிப்பதற்கான பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 இன் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பிற்குரிய கருத்துரை தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை |
| (இ) | மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.1 பந்தியின் பிரகாரம் பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்காவும் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பங்கள் 23 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அதில் 12 பேருக்கு ஒரு நாள் பயிற்சியொன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பிற்குரிய கருத்துரை தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை |